## சுருக்கம்

பணியமைப்பு – சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை–அங்கன்வாடி பணியாளர்கள், சத்துணவு அமைப்பாளர்களாகப் பணிபுரிந்து 01.04.2003 தேதிக்குப் பின்னர் ஊர் நல அலுவலர்கள் / மேற்பார்வையாளர்கள் (நிலை-2), ஆசிரியர்களாக பணி நியமனம் பெற்றவர்கள் – மாத சிறப்பு ஓய்வூதியம் ரூ.2,000/- வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந1) துறை

அரசாணை (நிலை) எண்.41 நாள் 29.08.2019

விகாரி ஆவணி 12, திருவள்ளுவராண்டு 2050

படிக்கப்பட்டன:-

1. அரசாணை (நிலை) எண்.883, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந1) துறை, நாள் 01.04.1985.
2. அரசாணை (நிலை) எண்.1641, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந1) துறை, நாள் 08.08.1985.
3. அரசாணை (நிலை) எண்.64, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி-1) துறை, நாள் 23.04.2003.
4. அரசாணை (நிலை) 12, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி-1) துறை, நாள் 12.01.2010.
5. அரசாணை (நிலை) எண்.314, நிதித் (ஊதியப் பிரிவு) துறை, நாள் 25.10.2017.

மேலும் படிக்கப்பட்டது:-

6. சமூக நல ஆணையரின் கடிதம் ந.க.எண்.41373/ நிர்3(2)/2013, நாள் 20.06.2019.

**********

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்வு செய்யப்பட்ட குழந்தை நல அமைப்பாளர்களில் (பாலசேவிகா) தகுதியுள்ளவர்களைக் கொண்டு, ஊர் நல அலுவலர் பணி நியமனத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வயது மற்றும் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிக்களுக்கான விதிகளில் விதி 10–A ஆகியவற்றைத் தளர்வு செய்து நிரப்புவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. ஊர்நல அலுவலருக்கான தற்காலிக விதிகளில் நேரடி நியமனத்திற்கு குறைந்தபட்ச வயது 20, அதிகபட்ச வயது 35 என்று நிர்ணயம் செய்யப்பட்டும், பெண்கள் மட்டுமே இப்பதவிக்கு நியமனம் செய்யப்படுவார்கள் என்றும், தமிழ்நாடு சார்நிலை பணிகளுக்கான விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச பொது கல்வித் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2) மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உள்ள மேற்பார்வையாளர் பதவிக்கு பணியிட மாறுதல் மூலம் பணி நியமனம் செய்யப்படுபவர்கள் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிக்களுக்கான விதிகளின்

பகுதி–IIஇல் வரிசை(1)ல் வரையறுக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச கல்வித் தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

3) மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், உலக வங்கி உதவியுடன் செயல்படும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்-3 மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் (பொது) ஆகியவற்றின் கீழ் பணியாற்றும் பி.எட்., / எம்.எட்., பட்டம் பெற்ற பணியாளர்களுக்கு சலுகையின் அடிப்படையில் சிறப்புத் தேர்வு நடத்தி ஆசிரியர் பணி வழங்குவதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4) மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், புரட்சித் தலைவர் சத்துணவுத் திட்டத்தில் தகுதி பெற்ற சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு சமூக நலத் துறையில் பதிவுறு எழுத்தர், அலுவலக உதவியாளர் பணியிடத்தில் பதவி உயர்வு வழங்குவதற்கும், தகுதி பெற்ற சத்துணவு அமைப்பாளர்களுக்கு மேற்பார்வையாளர் நிலை–2 பணியிடத்தில் பதவி உயர்வும் வழங்குவதற்கும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5) மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் அங்கன்வாடிப் பணியாளர்கள்/சத்துணவு அமைப்பாளர்களாகப் பணிபுரிந்து வயது முதிர்வு ஓய்வில் செல்பவர்களுக்கு மாதம் ரூ.2,000/- சிறப்பு ஓய்வூதியம் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

6) சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையால் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் மற்றும் சத்துணவுத் திட்டத்தின் கீழ் அங்கன்வாடிப் பணியாளர்கள் / சத்துணவு அமைப்பாளர்களாக பணிபுரிந்தவர்களுக்கு இத்துறையின் முழுநேரப் பணியிடங்களான மேற்பார்வையாளர் (நிலை–2) / ஊர்நல அலுவலர் (மகளிர்) பதவிகளுக்கு பணி நியமனம் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு பணி நியமனம் பெற்றவர்களுக்கு தொடர்ந்து மேற்பார்வையாளர் (நிலை–1) / விரிவாக்க அலுவலர் (சமூக நலம்) ஆக பதவி உயர்வு வழங்கப்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு 01.04.2003 தேதிக்குப் பின்னர் பணி நியமனம் பெறுபவர்களுக்கு புதிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அவ்வாறு 01.04.2003 தேதிக்கு பின்னர் பணி நியமனம் பெற்று மேற்பார்வையாளர் நிலை–2, மகளிர் ஊர் நல அலுவலர், சமூக நல விரிவாக்க அலுவலர், மேற்பார்வையாளர் நிலை–1, ஆசிரியர்கள் ஆக பணிபுரிந்து 31.12.2018 வரையில் வயது முதிர்வில் ஓய்வு பெற்றவர்களின் எண்ணிக்கை சுமார் 2266 என்றும், அவ்வாறு ஓய்வு பெற்றுள்ள 2266 நபர்களுக்கு சிறப்பு ஓய்வூதியம் வழங்கும் போது ஆண்டொன்றுக்கு ரூ.5.44 கோடி செலவினமும், ஒவ்வொரு ஆண்டும் தோராயமாக 400 பணியாளர்கள் ஓய்வு பெறுவதைத் தொடர்ந்து ஆண்டொன்றுக்கு ரூ.96.00 இலட்சம் கூடுதல் செலவினமும் ஏற்படும் என்றும் சமூக நல ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், இவர்கள் சமூக நலத் துறை பணியாளர்கள் என்பதாலும் 30 வருடங்களாக இத்துறையில் பணியாற்றி பின்னர் காலமுறை ஊதிய விகிதத்தில் பணியேற்றவர்கள் என்பதாலும் இவர்களின் நிலையைப் பரிசீலித்து உரிய ஆணை வழங்குமாறு சமூக நல ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

8) சமூக நல ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் அங்கன்வாடிப் பணியாளர் / சத்துணவு பணியாளர்களாக பணிபுரிந்து 01.04.2003 தேதிக்குப் பின்னர் மேற்பார்வையாளர் (நிலை–2)/ ஊர்நல அலுவலர் (மகளிர்) ஆக பணி நியமனம் பெற்றும், இதனைத் தொடர்ந்து மேற்பார்வையாளர் (நிலை–1) / விரிவாக்க அலுவலர் (சமூக நலம்) ஆக பதவி உயர்வு பெற்றும் மற்றும் ஆசிரியர்களாக பணி நியமனம் பெற்றும் வயது முதிர்வில் ஓய்வு பெற்ற / பெறும் மேற்பார்வையாளர்கள் (நிலை–2), ஊர்நல அலுவலர்கள் (மகளிர்), மேற்பார்வையாளர்கள் (நிலை–1), விரிவாக்க அலுவலர்கள் (சமூக நலம்), ஆசிரியர்கள் ஆகியோருக்கு மாத சிறப்பு ஓய்வூதியமாக ரூ.2,000/– வழங்கி ஆணையிடுகிறது.

9) மேலே பத்தி-8-இல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் - 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு, நலத் திட்டங்கள்–102 சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் - மாநிலச் செலவினங்கள்–AP ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு சிறப்பு வாழ்வாதார ஓய்வூதியம்– 327 ஓய்வூதியங்கள் 05 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள்"

(IFHRMS த.தொ.கு. 2235 60 102 AP 32705)

(Old த.தொ.கு.2235 60 102 AP 2754)

10) இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.40656/நிதி(சந)/2019, நாள் 27.08.2019-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ.மதுமதி
அரசு செயலாளர்

பெறுநர்
சமூக நல ஆணையர், சென்னை–15.
இயக்குநர் மற்றும் குழும இயக்குநர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள், தரமணி, சென்னை–113.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை / மதுரை.
சம்பந்தப்பட்ட மாவட்டக் கருவூல அலுவலர்கள்.
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு செயலாளர், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அவர்களின்
முதுநிலை முதன்மை தனிச் செயலர், சென்னை-9.
நிதி (சந / வரவு செலவு – I, II) துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

29/08/19
பிரிவு அலுவலர்